சுற்றுநிருபம் :- 12/2015

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாண சபை
35, அம்மன் வீதி
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்
2015.08.05

வடக்கு மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும்

சமாசங்களின் தலைவர்களுக்கும்

## புதிதாக பதவி நியமனம் பெற்ற கூட்டுறவுப் பணியாளர்களுக்கான இரண்டு நாள் புகுமுகப் பயிற்சித் திட்டம்

புதிதாக பதவி நியமனம் பெற்ற கூட்டுறவுப் பணியாளர்களுக்கான இரண்டு நாள் புகுமுகப் பயிற்சியொன்றை நடாத்துவதற்கும் அதற்கான நிதியிடலை மேற்கொள்வதற்கும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது

'சங்கங்களில் புதிய நியமனதாரிகளான கூட்டுறவு பணியாளர்கள் தம் வகிபாகமுணர்ந்து செயற்படுவதுடன் தமது சங்கத்தினது வளர்ச்சிக்காக அயராது உழைக்கும் மனப்பாங்கினை ஏற்படுத்தல்' என்ற பயிற்சி இலக்குடன் குறித்த புகுமுகப் பயிற்சி திட்டமிடப்பட்டுள்ளது.

இப் புகுமுகப் பயிற்சியானது மூன்று வெவ்வேறான இலக்கக் குழுக்களுக்காக நடாத்தப்படவுள்ளது. குறித்த இலக்குக குழுக்களில் அடங்கிய பதவியணியினர் விபரம் வருமாறு :-

### இலக்குக் குழு 1 - முகாமை மட்டப் பணியாளர்கள்

பொதுமுகாமையாளர், முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர், நிதி முகாமையாளர், வங்கிச் சேவை முகாமையாளர், நிர்வாக முகாமையாளர், கிராமிய வங்கி முகாமையாளர், பண்ணை முகாமையாளர், கணக்காளர், செயலாளர், வர்த்தக முகாமையாளர், ஆளணி முகாமையாளர், உள்ளக கணக்காய்வாளர், ஆணைக்குழுவால் குறித்துரைக்கப்படும் இதர முகாமை மட்டப் பணியாளர்கள்

### இலக்குக் குழு 2 - மேற்பார்வை மற்றும் செயல்பாட்டு மட்டப் பணியாளர்கள்

கிளை முகாமையாளர், எழுதுனர், களஞ்சிய முகாமையாளர், விற்பனை உதவியாளர், களஞ்சியப் பொறுப்பாளர், லிகிதர், காசாளர், விற்பனையாளர், விற்பனை உதவியாளர், கணக்கு பதிவாளர், உற்பத்தி முகாமையாளர், அங்கத்தவர் தொடர்பு பயிற்சி உத்தியோகத்தர், வெளிக்கள உத்தியோகத்தர், கணணிப்பக்க உருவாக்குனர், அலுவலக உதவியாளர், ஆணைக்குழுவால் குறித்துரைக்கப்படும் இதர மேற்பார்வை மற்றும் செயல்பாட்டு மட்டப் பணியாளர்கள்

### இலக்குக் குழு 3 - ஏனையவர்கள்

அலுவலக சேவகர், பாதுகாப்பு உத்தியோகத்தர், சாரதி, எரிபொருள் நிரப்புனர், லொறிச் சுத்திகரிப்பாளர், இயந்திர இயக்குனர், அச்சுக் கோப்பாளர், புத்தகம் கட்டுனர், அச்சக வெட்டுனர், ஆணைக்குழுவால் குறித்துரைக்கப்படும் ஏனைய பணியாளர்கள்

வெளிவாரி ஆட்சேர்ப்பின் போது புதிதாக நியமனபெற்ற இலக்குக் குழு 1, 2 மற்றும் 3 ஐச் சேர்ந்த பணியாளர்கள் அவ்வப்போது ஆணைக்குழுவால் பயிற்சிக்கு அழைக்கப்படுவார்கள்

இலக்குக் குழு 2 பதவிகளிலிருந்து இலக்குக் குழு 1 பதவிகளுக்கு உள்வாரி ஆட்சேர்ப்பின் போது, ஆணைக்குழு நிர்ணயித்த பதவித் தகைமைகள் பொருந்துகையில், தெரிவு செய்யப்பட்டு பதவியுயர்வு பெறுபவர்களும் அவர்கள் பதவியுயர்த்தப்பட்ட குறித்த பதவியணி அடங்கும் இலக்குக் குழுவுக்கான புகுமுகப் பயிற்சிக்கு அழைக்கப்படுவார்கள்.

குறித்த ஒரு புகுமுகப் பயிற்சிக்காக ஒரே சமயத்தில் 30 பணியாளர்கள் அழைக்கப்படுவதுடன் பயிற்சி முடிவில் வெற்றிகரமாக பயிற்சியினைப் பூர்த்தி செய்தமைக்கான சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சியில் பங்குபற்றும் பணியாளர்களுக்கு தேநீர், சிற்றுண்டி மற்றும் மதிய உணவு வழங்கப்படுவதுடன் பிரயாணப்படியும் வழங்கப்படும்.

இப் புகுமுகப் பயிற்சிகள் கூட்டுறவுத் துறை சார்ந்த பயிற்சிகள் வழங்கும் அமைப்புக்களுடன் இணைந்து ஆணைக்குழுவால் ஒழுங்கமைக்கப்படும்.

**குறித்த புகுமுகப் பயிற்சியானது, பதவி நிர்ணய அங்கீகாரத்திற்கு முன்னர் ஆணைக்குழுவால் பரிசீலிக்கப்படும் தகைமைப் பொருத்தம் போன்று பதவி நிர்ணய அங்கீகாரத்திற்கு பின்னர் குறித்த பதவிக்கு பணியாளரை தயார்படுத்தும் ஏற்பாடொன்றாக இருப்பதனால் தகைமைப் பொருத்தம் போன்ற அதே முக்கியத்துவத்தினை பெறுகின்றது. எனவே சங்கங்கள் புகுமுகப் பயிற்சிக்காக அழைக்கப்படும் பணியாளர்களை விடுவிக்க வேண்டும் என்பதுடன் அவர்களது பணிகளைக் கவனிக்கவென மாற்று ஏற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டுமெனவும் ஆணைக்குழு கேட்டுக் கொள்கின்றது.**

இச்சுற்றுநிருபம் 2015.07.27ஆம் திகதிய ஆணைக்குழுத் தீர்மானப்படி வெளியிடப்படுகின்றது.

பொ.வாகீசன்
செயலாளர்

பொ. வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாணசபை